காவல் துறை சார்பில்

# ரூ.23.53 கோடி செலவில் 96 காவலர் குடியிருப்புகள், நான்கு காவல் நிலையங்கள்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, பிப்.22-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.2.2024) தலைமைச் செயலகத்தில், காவல் துறை சார்பில் 23 கோடியே 53 இலட்சத்து 32 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 96 காவலர் குடியிருப்புகள், நான்கு காவல் நிலையங்கள் மற்றும் சென்னை, அசோக் நகரில் சிலை கடத்தல் பிரிவு காவல் நிலையம் ஆகியவற்றை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.**

காவல்துறை என்பது, குற்றங்களைத் தடுக்கும் துறையாகவும், தண்டனை பெற்றுத்தரும் துறையாகவும் மட்டும் அல்லாமல், குற்றங்கள் நடக்காத சூழ்நிலையை உருவாக்கும் துறையாகச் செயல்பட வேண்டும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி மாநிலத்தின், அமைதியைப் பேணிப் பாதுகாத்து, சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கும் முக்கியப் பணிகளை ஆற்றி வரும் காவல் துறையின் பணிகள் சிறக்க, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுநாள்வரை, ரூ.438.05 கோடி செலவில் 2637 காவலர் குடியிருப்புகள், ரூ.36.64 கோடி செலவில் 36 காவல் நிலையக் கட்டடங்கள், ரூ.69.83 கோடி செலவில் 14 காவல்துறை இதரக் கட்டடங்கள், "உங்கள் சொந்த இல்லம்" திட்டத்தின் கீழ் ரூ.55.19 கோடி மதிப்பிலான 253 குடியிருப்புகள் ஆகியவற்றை காவல்துறையினரின் மேம்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக இன்று, கோயம்புத்தூர் மாவட்டம் – வி.எச். ரோட்டில் 16 கோடியே 57 இலட்சத்து 94 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 96 காவலர் குடியிருப்புகள்;

கோயம்புத்தூர் மாவட்டம் - இரத்தினபுரியில் 2 கோடியே 21 இலட்சத்து 38 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள காவல் நிலையம், சென்னை மாவட்டம் – நந்தம்பாக்கத்தில் 1 கோடியே 46 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள காவல் நிலையம், புதுக்கோட்டை மாவட்டம் - மழையூரில் 83 இலட்சத்து 94 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள காவல் நிலையம், செங்கல்பட்டு மாவட்டம் செங்கல்பட்டில்

1 கோடியே 18 இலட்சத்து 28 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள செங்கல்பட்டு தாலுக்கா காவல் நிலையம் மற்றும் சென்னை மாவட்டம் - அசோக் நகரில் 1 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சிலை கடத்தல் தடுப்பு பிரிவு காவல் நிலையம் என மொத்தம் 6 கோடியே 95 இலட்சத்து 38 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நான்கு காவல் நிலையங்கள் மற்றும் ஒரு சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு காவல் நிலையம்;

என மொத்தம், 23 கோடியே 53 இலட்சத்து 32 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 96 காவலர் குடியிருப்புகள், நான்கு காவல் நிலையங்கள் மற்றும் ஒரு சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு காவல் நிலையம் ஆகியவற்றை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, காவல் துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் முனைவர் அ.கா. விசுவநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கோயம்புத்தூர் மாவட்டத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக கோயம்புத்தூர் மாநகர காவல் ஆணை யர் வி. பாலகிருஷ்ணன் மற்றும் காவலர்கள் கலந்து கொண்டனர்.

பொள்ளாச்சி

# வடசித்தூர் கிளை முக்கியக் கால்வாய்கள் அனைத்தும் தூர் வாரப்படும்!

## சட்டப்பேரவையில் - நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் உறுதி!



**சென்னை, பிப்.22-**

**"பொள்ளாச்சி வடசித்தூர் கிளை முக்கியக் கால்வாய்கள் அனைத்தும் தூர்வாரப்படும்!" என, சட்டப்பேரவையில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் உறுதியளித்தார்.**

**சட்டப்பேரவையில் நேற்று, கேள்வி நேரத்தில் இதுகுறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:**

**பொள்ளாச்சி வி.ஜெயராமன் :** பொள்ளாச்சிவடசித்தூர் கிளை வாய்க்காலைத் தூர்வார அரசு முன்வருமா?

**அமைச்சர் துரைமுருகன்:** வடசித்தூர் கிளை வாய்க்கால் தூர்வாரப்படுமா என்று கேள்வி கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே, தூர்வாரி இருக்கிறோம். தூர்வாரிக் கொண்டிருக்கிறோம். அதில் இரண்டு பகுதிகள் உள்ளன. மொத்தம் சுமார் 10,150 ஏக்கர் பாசன வசதி பெறுகிறது. அதில் சுமார் பாதியளவிற்கு 2022-2023 ஆம் ஆண்டில் 17 இலட்சம் ரூபாயில் தூர்வாரப்பட்டது. தற்போது, இந்த நிதியாண்டில் அடுத்த பகுதியைத் தூர்வாருவதற்கான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம். ஆகையால், பொதுவாக PAPன் மொத்த கால்வாயையும் தூர்வார வேண்டுமென்று தற்போது DPR தயார் செய்திருக்கிறோம். அதில் 17 கோடி ரூபாய் மதிப்பிடப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் அனுமதி கிடைத்த பிறகு, PAPன் முக்கியக் கால்வாய்கள் அனைத்தும் தூர்வாரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**பொள்ளாச்சி வி.ஜெயராமன்:** வடசித்தூர் கிளை வாய்க்காலை முழுமையாகத் தூர்வாரி, வேறு என்னென்ன பணிகள் செய்ய வேண்டுமோ அவற்றையெல்லாம் செய்து, கடைமடை வரை பாசனம் சென்றடையத்தக்க வகையில் நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் பணிகளைச் செய்து கொடுப்பார்களா?

**அமைச்சர் துரைமுருகன்:** அதிகாரிகள் கொடுத்த புள்ளிவிவரத்தை நான் இங்கே சொல்கிறேன். ஆனால், அவர் அந்த இடத்திலே வசிக்கிற அனுபவத்தின் அடிப்படையில் அதைச் சொல்கிறார். எனவே, உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிச்சயம் நிறைவேற்றப்படும், கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பொள்ளாச்சி வி.ஜெயராமன்:** மிக்க நன்றி ஐயா. பரம்பிக்குளம்ஆழியாறு திட்டம் ஆரம்பிக்கப்பட்டு, செயல்பாட்டிற்கு வந்து ஏறத்தாழ 60 ஆண்டுகள் ஆகிவிட்டன. 1965 ஆம் ஆண்டு முதல் நீர்ப்பாசனம் பெற்று வருகிறது. அதனுடைய மேல்மடையிலிருந்து கடைமடை வரையிருக்கிற அனைத்து வாய்க்கால்களும், பரம்பிக்குளம் மெயின் வாய்க்கால், திருமூர்த்தி அணையிலிருந்து வெள்ளக் கோவில் கடைசி வரையில் 123 கி.மீ. நீளமுள்ள மெயின் வாய்க்கால் முழுவதுமாக தூர்வாரப்பட்டு, செப்பனிடப்பட்டு அதனுடைய கொள்ளளவை அதிகப்படுத்த வேண்டும்.

தற்போது 1,100 கன அடி தண்ணீர் போகிற அளவிற்கு இருக்கிற கொள்ளளவை, மேலும் அதிகமாகப் போகும் வகையில், அனைத்து கிளை வாய்க்கால்களையும் (distributary channels) முழுமையாகக் கம்பி கட்டி, கான்கிரீட் போட்டு, மொத்தம் 4 இலட்சத்து 25 ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்கும் தடையின்றி தண்ணீர் சென்றடையும் வகையில், அமைச்சர் அவர்கள் எனக்கு பதிலளித்ததுபோல், முழுமையாக அணையினுடைய மேல் பகுதியி லிருந்து கடைமடை வெள்ளக்கோவில் வரை இருக்கிற அனைத்து பகுதிகளிலும்,

பிரதான வாய்க்கால் உட்பட, கிளை வாய்க்கால்கள் வரை, அனைத்தையும், முழுமையாகக் கம்பிக் கட்டி, கான்கிரீட் போட்டு, தண்ணீர் வீணாகாமல் விவசாயிகளுக்கு dam to root, அணையிலிருந்து பயிரின் வேர் வரை தண்ணீர் செல்லத்தக்க வகையில், தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்தத்தக்க வகையில், ஒரு நல்ல திட்டத்தை, அனுபவம் வாய்ந்த நம்முடைய நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் செய்து கொடுப்பார்களா?

**அமைச்சர் துரைமுருகன்:** தெளிவாக, விளக்கமாகவே சொல்கிறேன். எனக்கே அதனுடைய முழு விவரம் தெரியும். எந்தெந்த வாய்க்கால்கள் அடைப்பட்டிருக்கின்றன; எந்தெந்த வாய்க்கால்களினுடைய tail endக்கு தண்ணீர் செல்லவில்லை என்பதும் எனக்குத் தெரியும். ஆகையினால்தான், நான் ஆரம்பத்திலே சொன்னேன், PAPயினுடைய மொத்த வாய்க்கால் களை, கிளை வாய்க்கால்கள் உட்பட, PAPயினுடைய main canalலிருந்து எல்லாவற்றையும் தூர்வார வேண்டும். உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, 55 வருடங்கள் ஆகிவிட்டன. காட்டூர் canalக்கூட அதெல்லாம் உடைந்து போயிருந்தன. அதையும் சீர் செய்திருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால், காட்டூர் canalக்குள்ளே jeepலே அந்த ஒரு பகுதியிலிருந்து மறுபடி இந்த பகுதி வரையிலே நானே பயணம் செய்து பார்த்துவிட்டு, அந்தக் கால்வாயைச் சீர் படுத்தி இருக்கிறேன். எனவே, அதிலே உறுப்பினருக்கு எவ்வளவு அக்கறை உண்டோ, அதே அக்கறை அரசுக்கும் உண்டு.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில்

# 15,471 சிறுவணிகர்களுக்கு ரூ.26.21 கோடி கடன் வழங்கல்!

## கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தகவல்!



*சென்னை, பிப்.22-*

*கூட்டுறவுத்துறையின் "முதலமைச்சரின் சிறப்பு சிறு வணிகக் கடன் திட்டம்" மூலம் மிக்ஜாம் புயல் மற்றும் பெருமழையினால் பாதிக்கப்பட்ட சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களைச் சேர்ந்த 15,471 சிறுவணிகர்களுக்கு ரூ.26.21 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது என்று கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.*

*இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*

*தமிழ்நாட்டில் டிசம்பர் 3 மற்றும் 4 ஆம் தேதிகளில் வீசிய "மிக்ஜாம்" புயல் காரணமாக சென்னை மாவட்டத்தில் கடுமையான மழைப்பொழிவு ஏற்பட்டது. மேலும், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் குறிப்பிட்ட சில பகுதிகளிலும் வரலாறு காணாத மழைப்பொழிவு ஏற்பட்டு கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டன.*

*முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, "மிக்ஜாம்" புயல் மற்றும் பெருமழையினால் பாதிக்கப்பட்ட சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்ட சிறு வணிகர்களின் தொழில் பயன்பாட்டிற்கான இயந்திரங்களை பழுதுபார்க்கவும் மற்றும் அவர்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்க, அரசு ஆணை வெளியிடப்பட்டு "முதலமைச்சரின் சிறப்பு சிறு வணிகக் கடன் திட்டம்" எனும் புதிய கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.*

*சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி மற்றும் சென்னையில் உள்ள நகரக் கூட்டுறவு வங்கிகள் மூலமும் காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டங்களில் உள்ள நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் மத்தியக் கூட்டுறவு வங்கி மூலமும் 4 % வட்டியில் அதிகபட்ச கடன் தொகை ரூ.10,000/ வரை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இக்கடனை 50 வாரங்களில் வாரந்தோறும் ரூ.200/ என்ற அடிப்படையில் ஒரு வருட காலத்திற்குள் 4% வட்டியுடன் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும் அல்லது மாதந்தோறும் ரூ.1000/ வீதம் உரிய வட்டியுடன் திருப்பி செலுத்தவும் அறிவுறுத்தப்பட்டது.*

*மேலும், தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகள் மூலம் டிசம்பர் 2023 இல் பெய்த பெரு மழை காரணமாக பாதிக்கப்பட்ட சிறுவணிகர்களுக்கு ரூ.10,000 வரை 4% வட்டிவீதத்திலும், ரூ.10,001 முதல் ரூ.1,00,000 வரை 10% வட்டிவீதத்திலும் (பயனாளிகளிடமிருந்து 6% வட்டியும், அரசிடமிருந்து 4% வட்டி மானியமாகவும் பெறப்படும்), தூத்துக்குடி மாவட்டத்தின் ஏரல் மற்றும் ஆத்தூர் நகரங்களில் உள்ள சிறுவணிகர்களுக்கு ரூ.100,000 முதல் ரூ.3,00,000 வரை 8.50% வட்டி வீதத்தில் கடன் வழங்கவும் அரசாணை வெளியிடப்பட்டது.*

*அதன்படி, சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு 17.02.2024 வரை ரூ.10,000 வரையிலான கடன்களை 11,949 சிறுவணிகர்கள் ரூ.1,194.35 இலட்சம் அளவிற்கும், ரூ. ரூ.10,001 முதல் ரூ.1,00,000 வரையிலான கடன்களை 3480 சிறுவணிகர்கள் ரூ.1383.77 இலட்சம் அளவிற்கும், இதுமட்டுமின்றி ரூபாய் ஒரு இலட்சத்திற்கும் மேலான கடன்களை 42 சிறுவணிகர்கள் ரூ.43.00 இலட்சம் அளவிற்கும் ஆக மொத்தம் 15,471 சிறுவணிகர்கள் ரூ.26.21 கோடி அளவிற்கு கடன் பெற்று பயனடைந்துள்ளனர்.*

*மேலும் மிக்ஜாம் புயல் மற்றும் பெரு மழை பாதிப்பிற்கு பின்பு மேற்கண்ட 8 மாவட்டங்களில் பயிர்க்கடன் 67,293 நபர்களுக்கு ரூ.421.20 கோடி, (சென்னை தவிர) கேசிசி கால்நடை கடன் 9,700 நபர்களுக்கு ரூ.64.58 கோடி (சென்னை தவிர), மத்திய கால வேளாண் கடன் 608 விவசாயிகளுக்கு ரூ.13.03 கோடி, மகளிர் சுய உதவி குழுக்கடன் 2,130 நபர்களுக்கு ரூ.151.64 கோடி, TABCEDCO கடன் 218 நபர்களுக்கு ரூ3.47 கோடி, TAMCO கடன் 175 நபர்களுக்கு ரூ.2.25 கோடி, NHFDC கடன் 293 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1.12 கோடி, தாட்கோ கடன் 187 நபர்களுக்கு ரூ7.09 கோடி, சிறுவணிக கடன் 10,948 சிறுவணிகர்களுக்கு ரூ.36.62 கோடி, சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவன கடன் (MSME) 614 பயனாளிகளுக்கு ரூ.3.73 கோடி, பணிபுரியும் மகளிர் கடன் 156 மகளிருக்கு ரூ.5.71 கோடி, மகளிர் தொழில் முனைவோர் கடன் 503 மகளிருக்கு ரூ.2.44 கோடி ஆக மொத்தம் 92,825 நபர்கள் ரூ.712.87 கோடி அளவிற்கு கடன் பெற்று பயனடைந்துள்ளனர்.*

*மேலும், தொடர்ந்து நடைபெற்று வரும் இந்த சிறப்பு கடன் முகாம்களில், சிறுவணிகர்கள் வங்கிக் கிளைகளை நேரில் அணுகியோ அல்லது உரிய ஆவணங்கள் மற்றும் விவரங்களை கூட்டுறவுத் துறையின் வலைதளத்தில் உள்ள இணையவழி விண்ணப்பத்தின் மூலம் விண்ணப்பித்தோ பயனடையுமாறு கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் கேட்டுக் கொண்டுள்ளார்.*

சட்டவியலுக்கு பாலி நரிமன் ஆற்றிய பங்களிப்புகள்

# தலைமுறை தலைமுறைகளுக்கும் நினைவுகூரப்படும்!

## மறைவையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தியில் புகழாரம்!



**சென்னை, பிப். 22-**

**புகழ்பெற்ற சட்டவியல் அறிஞரும் முன்னாள் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரலுமான பாலி நரிமன் அவர்கள் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-**

புகழ்பெற்ற சட்டவியல் அறிஞரும் முன்னாள் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரலுமான பாலிநரிமன் அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

வழக்கறிஞராக எழுபதாண்டுகளுக்கும் மேலான தனது பயணத்தில் சுமார் ஐம்பதாண்டுகள் அவர் உச்சநீதிமன்றத்தில் வாதாடியுள்ளார் என்பது வரலாற்றுச் சிறப்பு மிக்கதும், குறிப்பிடத்தகுந்த ஒன்றும் ஆகும். பல முக்கியத் தீர்ப்புகளுக்குக் கருவியாக விளங்கிய பாலி நரிமன் அவர்கள் சட்டவியலுக்கு ஆற்றிய பங்களிப்புகள் தலைமுறை தலைமுறைகளுக்கும் நினைவு கூரப்படும்.

அன்னாரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் சக வழக்கறிஞர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

துவாக்குடியில் இருந்து விமான நிலையம் வரை செல்லும் அரை வட்டப் பகுதியில் - தேசிய நெடுஞ்சாலை ஆணையம்

# சுங்கச்சாவடி அமைக்கும் பணியைத் தடுத்து நிறுத்துவீர்!

## பொதுப்பணித்துறை அமைச்சருக்கு - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வலியுறுத்தல்!



*சென்னை, பிப்.22-*

*சட்டப்பேரவையில் நேற்று, கேள்வி நேரத்தின் போது, பள்ளிக் கல்வித் துறை தொடர்பான கேள்விக்குப் பதிலளிக்கும் முன்னர், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தமது தொகுதிக்குட்பட்ட துவாக்குடியில் இருந்து விமான நிலையம் வரை செல்கிற அரை வட்டப் பகுதியில், தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI) சுங்கச்சாவடி அமைக்கும் பணியில் இறங்கியிருப்பதைத் தடுத்து நிறுத்த வேண்டும்!" என வேண்டுகோள் விடுத்தார்.*

*சட்டப்பேரவையில் - இதுகுறித்து அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி குறிப்பிட்டதா வது:*

*என்னுடைய தொகுதி சார்ந்த ஒரு பிரச்சினையை நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர நான் கடமைப்பட்டிருக்கிறேன்.*

*என்னுடைய தொகுதியில் இருக்கின்ற துவாக்குடியில் இருந்து விமான நிலையம் வரை செல்கின்ற அரை வட்டப் பகுதியில் இருக்கின்ற, NHAI மூலமாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற Toll Gate, அதில் வசூல் செய்கின்ற பணியில் இன்றைக்கு ஒன்றிய அரசு இறங்கியிருக்கிறது. அதைக்கூட, இன்னும் இரண்டு நாட்களில் மாற்றுக் கட்சியைச் சாந்திருக்கின்றவர்கள் ஓர் ஆர்ப்பாட்டம் நடத்த இருப்பதாக நான் கேள்விப்பட்டேன்.*

*மாற்றுக் கட்சியாக இருந்தாலும், அவர்களும் எங்களுடைய தொகுதி மக்கள் தான் என்கின்ற வகையில், அதை உடனடியாகத் தடுத்து நிறுத்துகின்ற பணியில் நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் NHAIயைச் சார்ந்திருக்கின்ற அதிகாரிகளிடம் எடுத்துச் சொல்ல வேண்டும் என்கின்ற வேண்டுகோளை வைக்கிறேன்.*

*இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி குறிப்பிட்டார்.*

தண்டராம்பட்டு தொகுதி முன்னாள் கழக சட்டமன்ற உறுப்பினர் – முன்னாள் எம்.பி.,

# மொழிப்போர்த் தியாகி த.வேணுகோபால் மறைவு!

## சட்டப்பேரவையில் இரங்கல்!



*சென்னை, பிப்.22-*

*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், தண்டராம்பட்டு தொகுதி முன்னாள் கழக சட்டமன்ற உறுப்பினர் முன்னாள் எம்.பி. த. வேணுகோபால் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.*

*இதுதொடர்பாக, நேற்று காலை, சட்டப்பேரவையில் - பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் படித்த இரங்கல் குறிப்பு வருமாறு :-*

*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினரான மொழிப் போர் தியாகி த. வேணுகோபால் அவர்கள் 15-2-2024 அன்று மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*த.வேணுகோபால் அவர்கள் 1977-1980 மற்றும் 1980-1984 ஆகிய ஆண்டுகளில் தண்டராம்பட்டு தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றினார்கள். மேலும், 1996-1997, 1998-1999, 1999-2004, 2004-2009 மற்றும் 2009-2014 ஆகிய ஆண்டுகளில் மக்களவை உறுப்பினராகவும் திறம்பட பணியாற்றினார்கள்.*

*இம்முன்னாள் உறுப்பினரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.*

*(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)*

